# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 80/பேரூ/2025**
**நாள் : 10.06.2025**

திருமதி. ஜெ. ரூபி சேகர்,
குரோம்பேட்டை,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி,
மயிலாடுதுறை மாவட்டம். – எதிர் மனுதாரர்

சென்னை, குரோம்பேட்டை, மும்மூர்த்தி நகர், 5வது தெரு, கதவு எண். 12/94, என்ற முகவரியை சேர்ந்த திருமதி. ஜெ. ரூபி சேகர் என்பவரது 18.01.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.01.2025 அன்று பெறப்பட்டு, 80/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, குரோம்பேட்டை, மும்மூர்த்தி நகர், 5வது தெரு, கதவு எண். 12/94, என்ற முகவரியை சேர்ந்த திருமதி. ஜெ. ரூபி சேகர் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 18.01.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

எனது பெயர் ஜெ. ரூபி சேகர். மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனது தந்தை வழி பாட்டி (எனது தந்தையின் தாயார்) சொத்தாக ஒரு வீடும் அதனோட சேர்ந்த நிலமும், மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, எருக்கட்டாஞ்சேரி கிராமம், ஆஸ்பிடல் தெருவில் அமைந்திருக்கிறது. சொத்தின் பழைய சர்வே எண். 461B/3A நத்தம் சர்வே எண்.643/7 பட்டா எண். 871.

தைரியம் மற்றும் எட்வர்ட் பெயர்களுக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. சொத்தின் கிரையப் பத்திரம் ராஜம்மாள் பெயரில் இருக்கிறது. சொத்தின் வரி விதிப்பு எண். 4586, வார்டு – 10, விலாசம்: 11/4, ஆஸ்பத்திரி தெரு, பொறையார் (எருக்கட்டாஞ்சேரி கிராமம்), தரங்கம்பாடி தாலுக்கா.

காரைக்காலை சேர்ந்த விக்டோரியா ராஜாத்தி என்பவர் மோசடி ஆவணங்கள் மூலமாக இந்த சொத்தின் மீதான சொத்து வரியை தன் பெயருக்கு மாற்றிக் கொண்டார்.

சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பை மீறி மோசடியாக விக்டோரியா ராஜாத்தி, அவர் பெயருக்கு சொத்து வரியை மாற்றியிருப்பதை இரத்து செய்திடக் கோரி கடந்த அக்டோபர் 16, 2024 (16.10.2024) தேதியிடப்பட்ட புகார் மனுவை தரங்கம்பாடி தாலுக்கா, தரங்கம்பாடி பேரூராட்சி அலுவலக செயல் அலுவலரான பூபதி கமலக்கண்ணன் என்கிற நபருக்கு பதிவுத்தபாலில் அனுப்பினேன்.

அரசு அலுவலகத்தில் பெறப்படும் புகார் மனுக்களை மனுப் பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் மனுவிற்கான தீர்வை கொடுத்துவிட வேண்டும் என்கிற அரசின் அலுவலக விதிகளை கண்டுகொள்ளாமல் தரங்கம்பாடி தாலுக்கா, தரங்கம்பாடி பேரூராட்சி அலுவலக செயல் அலுவலரான பூபதி கமலக்கண்ணன் என்கிற நபர் எனது மேற்படி புகார் மனுவை கிடப்பில் போட்டுவிட்டதால், இந்த விதிமீறல் தொடர்பாக கடந்த நவம்பர் 19, 2024 (19.11.2024) தேதியிடப்பட்ட நினைவூட்டல் கடிதத்தையும் அனுப்பினேன். இதன் மீதும் எவ்வித முறையான பதிலையும் தரங்கம்பாடி தாலுக்கா, தரங்கம்பாடி பேரூராட்சி அலுவலக செயல் அலுவலரான பூபதி கமலக்கண்ணன் என்கிற நபரிடமிருந்து நான் பெறவில்லை.

இந்நிலையில் டிசம்பர் 05, 2024 (05.12.2024) அன்று மேற்படி எனது புகார் மனுக்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பில் தகவல் அறிய எனது மகனான திரு. ஜெ. பிரவீன் குமார், தரங்கம்பாடி தாலுக்கா, தரங்கம்பாடி பேரூராட்சி அலுவலகத்திற்கு நேரில் சென்று அரசாணை G.O. No.99 Personnel and Administrative Reforms (A) Department Dated 21/09/2015 பிரிவு 3 (ii) மற்றும் பிரிவு 3 (iii)யை சுட்டிக்காட்டி மேற்படி எனது இரு மனுக்களின் மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் குறித்து அங்கிருந்த அலுவலர்களிடம் விசாரித்திருக்கிறார். தரங்கம்பாடி பேரூராட்சி அலுவலக அலுவலர்கள் எனது மகனுக்கு உரிய பதில் கூறாமல், "நீங்க மனு அனுப்பிட்டா உடனே நடவடிக்கை எடுத்திடனுமா, எடுக்கும்போதுதான் எடுப்போம்" என்று பொறுப்பற்ற வகையில் பேசிடவே செயல் அலுவலரான பூபதி கமலக்கண்ணன் என்கிற நபரை சந்திக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார் எனது மகன். அதுவரையில் தன்னை யார் என்று கூறாமலேயே எனது மகன் அருகிலேயே நின்றிருந்த தரங்கம்பாடி தாலுக்கா, தரங்கம்பாடி பேரூராட்சி அலுவலக செயல் அலுவலரான பூபதி கமலக்கண்ணன் எனது மகனிடம், "மேற்படி உன் மனுவின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாதுடா. நீ எங்க வேணா போய் புகார் பண்ணிக்கோடா, என்னை எவனாலும் ஒண்ணும் பண்ண முடியாது" என்று மிகவும் பொறுப்பற்ற வகையிலும், ஏக வசனத்தில் தரக் குறைவாகவும் எனது மகனை நடத்தியிருக்கிறார்.

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சி செயல் அலுவலர் பூபதி கமலக்கண்ணன் மற்றும் அவர் கீழ் பணியாற்றும் தரங்கம்பாடி பேரூராட்சி அலுவலக அலுவலர்களுடைய இத்தகைய முறையற்ற நடத்தையால் புகார்தாரரான நான் மிகுந்த அதிர்ச்சிக்கும், மன உளைச்சலுக்கும் ஆளாகியிருக்கிறேன்.

மோசடியாக சொத்து வரியில் உரிமையாளர் பெயர் மாற்றம் செய்திட்ட விக்டோரியா ராஜாத்தி தரப்பிற்கு ஆதரவாக செயல்படும் வகையில் அமைந்திருக்கிறது மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சி செயல் அலுவலர் பூபதி கமலக்கண்ணன் மற்றும் அவர் கீழ் பணியாற்றும் தரங்கம்பாடி பேரூராட்சி அலுவலக அலுவலர்களுடைய செயல்பாடு.

புகார் மனுவின் மீது மேற்படி அரசாணையின்படி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்ட புகார்தாரரான எனது மகனிடம், "உன் மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது, நீ எங்க வேணா போய் புகார் பண்ணிக்கோ, என்ன எந்த அதிகாரியாலும் ஒன்னும் பண்ண முடியாது" என்று முறையற்ற வகையில் பேசி நடத்தியிருப்பது மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சி செயல் அலுவலர் பூபதி கமலக்கண்ணன் மற்றும் அவர் கீழ் பணியாற்றும் தரங்கம்பாடி பேரூராட்சி அலுவலக அலுவலர்களுடைய எதேச்சதிகார மனப்போக்கையே காட்டுகிறது.

எதேச்சதிகார மனப்போக்குடன் நடந்து கொள்ளும் மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சி செயல் அலுவலர் பூபதி கமலக்கண்ணன் மீதும், மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சி அலுவலக அலுவலர்கள் மீதும் உரிய துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மோசடியாக சொத்து வரியில் உரிமையாளர் பெயர் மாற்றம் செய்திட்ட விக்டோரியா ராஜாத்தி என்பவருடைய பெயரை நீக்கி பழைய உரிமையாளர்களான தைரியம் மற்றும் எட்வர்ட் பெயர்களிலேயே சொத்து வரியை செலுத்திட ஆவன செய்யும்படியும் தங்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 13.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. பூ. கமலக்கண்ணன் என்பவர் தனது அறிக்கை ந.க. எண். 674/2024/அ1, நாள் 21.04.2025-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10, ஆஸ்பத்திரி தெருவில் உள்ள குடியிருப்பின் சொத்துவரி விதிப்பு எண். 4586ற்கான வரிவிதிப்பாளர் பெயரினை போலி ஆவணங்களின் மூலம் மோசடியாக விக்டோரியா ராஜாத்தி என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்திருப்பதாக மும்மூர்த்தி நகர், குரோம்பேட்டை, சென்னை என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி. ஜெ. ரூபி சேகர் என்பவரால் மனு அளிக்கப்பட்டது.

மேற்படி மனுவின் மீது நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக மனுதாரரான திருமதி. ஜெ. ரூபி சேகர் மற்றும் திருமதி. சி. விக்டோரியா ராஜாத்தி ஆகியோருக்கு மேற்படி சொத்துவரி தொடர்பான ஆவணங்களை பேரூராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்க பேரூராட்சி அலுவலக கடித ந.க.எண். 674/2024/அ2 நாள் 02.12.2024ன்படி தெரிவிக்கப்பட்டது என்ற விபரம் பணிந்து தெரிவிக்கப்படுகிறது. அதன்படி திருமதி. ஜெ. ரூபி சேகர் மற்றும் திருமதி. சி. விக்டோரியா ராஜாத்தி ஆகியோர் தங்களுடைய ஆவணங்களின் நகல்களை

பேரூராட்சி அலுவலகத்தில் சமர்ப்பித்தனர் என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. விக்டோரியா ராஜாத்தி என்பவரால் உயில் ஆவணம், வட்டாட்சியரால் வழங்கப்பட்ட பட்டா மாறுதல் ஆணை ஆவணம், வில்லங்கச்சான்று, சிட்டா அடங்கல் பதிவேடு நகல் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புரையும் சமர்ப்பித்துள்ளார்.

திருமதி. ஜெ. ரூபி சேகர் என்பவர் பட்டா ஆவண நகல், இறப்பு சான்று நகல், வாரிசு சான்று நகல், சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புரை ஆகியவற்றை சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி நபர்களால் பேரூராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டது. இதில் பட்டா ஆவணமானது (பட்டா எண். 871) திரு. தைரியம் மற்றும் எட்வர்டு பெயரிலும் உள்ளது. திருமதி. விக்டோரியா ராஜாத்தி என்பவரின் பெயரிலும் உள்ளது.

எனவே பட்டா எண்.871-இன் மெய்த்தன்மை கோரி வட்டாட்சியர், தரங்கம்பாடி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பட்டா மெய்த்தன்மை கிடைக்கப் பெற்ற பின்னர் தொடர்புடைய ஆவணங்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 19.05.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற உள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 08.05.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திருமதி. ஜெ. ரூபி சேகர் என்பவர் தனது 19.05.2025 நாளிட்ட கடிதத்தில் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவரது மகன் ஜெ. பிரவின்குமார் என்பவர் விசாரணையில் கலந்துகொள்ள அனுமதி வழங்க கேட்டுக்கொண்டதற்கிணங்க மனுதாரர் சார்பாக அவரது மகன் ஜெ. பிரவீன் குமார் என்பவர் 19.05.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்: அதில் –

- மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10, 11/4, ஆஸ்பத்திரி தெரு, பொறையார், தரங்கம்பாடி என்ற முகவரியிலுள்ள பழைய சர்வே எண். 481 B/3A, நத்தம் சர்வே எண். 643/7, பட்டா எண்.871 கொண்ட சொத்தானது எனது கொள்ளுபாட்டி திருமதி. ராஜம்மாள் என்பவர் சுய சம்பாத்தியத்தில் கிரையம் செய்த சொத்தாகும்.

- எனது கொள்ளுபாட்டி ராஜம்மாள் என்பவருக்கு 3 மகன்கள் முறையே (1) டேவிட் பாக்கியநாதன் (எனது தாயாரின் தந்தை) , (2) தைரியம் மற்றும் (3) எட்வர்ட் ஆவர்.

- எனது கொள்ளு பாட்டியின் முதல் மகனான (எனது தாயாரின் தந்தை) டேவிட் பாக்கியநாதன் என்பவருக்கு எனது தாயார் ஜெ. ரூபிசேகர் உட்பட 3 மகள்கள் மற்றும் 1 மகன் உள்ளனர். இரண்டாவது மகனான தைரியம் என்பவருக்கு திருமணமாகி குழந்தைகள் இல்லை. முன்றாவது மகனான எட்வர்ட் என்பவருக்கு திருமணம் ஆகவில்லை.

- இதற்கிடையில் எனது தாத்தா டேவிட் பாக்கியநாதன் மற்றும் இரண்டாவது சின்ன தாத்தா எட்வர்ட் என்பவருக்கும் பாகப்பிரிவினை வழக்கு மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று (வழக்கு எண்.SA No,529 of 2008) அவ்வழக்கில் 15.02.2021 நாளிட்ட தீர்ப்புரையில் எனது கொள்ளு பாட்டி சொத்து முழுவதும் எனது சின்ன தாத்தா எட்வர்டுக்கு முழு சொத்தும் சேரும் என தீர்ப்பு வழங்கப்பட்டது.

- மேற்காணும் சொத்து வரியானது (வரிவிதிப்பு எண்.4586) சொத்தின் உரிமையாளர்களான தைரியம் மற்றும் எட்வர்ட் பெயர்களில் இருந்து வந்தது.

- இதற்கிடையில், எனது சின்ன தாத்தா எட்வர்ட் என்பவருடைய சித்தியின் மகளான (பாட்டி ராஜம்மாள் என்பவரின் தங்கை மகள்) திருமதி. விக்டோரியா ராஜாத்தி என்பவர், நீதிமன்ற ஆணைக்கு எதிராகவும், போலி ஆவணத்தை பேரூராட்சியில் சமர்ப்பித்து முறைகேடாகவும் சொத்துவரி பெயரானது தைரியம் மற்றும் எட்வர்ட் பெயர்களிலிருந்து தனது பெயரான விக்டோரியா இராஜாத்தி என்ற பெயரில் மாற்றம் செய்துள்ளார். இதற்கு பேரூராட்சி செயல் அலுவலரும் உடந்தையாக உள்ளார்.

- எனவே, பட்டா எண். 871ல் உள்ள சொத்துவரி விதிப்பானது சொத்து உரிமையாளர்களான தைரியம் மற்றும் எட்வர்ட் பெயர்களிலேயே மாற்றம் செய்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

- மேலும், இப்பொருள் குறித்தான புகார் மனுவினை தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் சமர்ப்பித்து பின்னர் அதன் நடவடிக்கை அறிந்துகொள்ளும் வகையில் நேரில் அணுகியபோது செயல் அலுவலர் என்னை தரக்குறைவாக ஒருமையில் பேசி மரியாதைக் குறைவுடன் நடந்துக்கொண்டுள்ளார் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரரான தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. பூ. கமலக்கண்ணன் என்பவர் 19.05.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்: அதில் -

- ஆஸ்பத்திரி தெரு, பொறையார், தரங்கம்பாடி என்ற முகவரியிலுள்ள குடியிருப்பின் சொத்து வரியானது (வரிவிதிப்பு எண். 4586) போலி ஆவணங்களின் மூலம் 1. தைரியம் 2. எட்வர்டு என்கிற பெயரிலிருந்து திருமதி. விக்டோரியா ராஜாத்தி என்பவர் முறைகேடாக தனது பெயருக்கு மாற்றம் செய்துள்ளார் என மனுதாரர் திருமதி. ஜெ. ரூபிசேகர் என்பவர் பேரூராட்சியில் மனு அளித்தார்.

- மேற்காணும் புகாரின் உண்மைத் தன்மை அறியும் பொருட்டு, புகார்தாரர் திருமதி. ஜெ. ரூபிசேகர் மற்றும் புகாருக்குள்ளான திருமதி. விக்டோரியா ராஜாத்தி ஆகியோருக்கு பேரூராட்சியில் 16.04.2025 அன்று ஆஜராகி ஆவணங்கள் அளிக்குமாறு கோரப்பட்டது.

- திருமதி. ஜெ. ரூபிசேகர் என்பவர் கீழ்க்காணும் ஆவணங்களின் நகல் சமர்ப்பித்தார்.
  1. பட்டா ஆவணம்
  2. பட்டா பதிவேடு
  3. வாரிசு சான்று
  4. சென்னை உயர்நீதிமன்ற S.A. No.529/2008ல் 15.02.2021 நாளிட்ட ஆணை.
- திருமதி. விக்டோரியா ராஜாத்தி என்பவர் கீழ்க்காணும் ஆவணங்களின் நகல் சமர்ப்பித்தார்.
  1. உயில் ஆவணம்
  2. வட்டாட்சியரால் வழங்கப்பட்ட பட்டா மாறுதல் ஆவணம்
  3. வில்லங்கச் சான்று
  4. சிட்டா
  5. அடங்கல் பதிவேடு
  6. சென்னை உயர்நீதிமன்ற S.A. No.529/2008ல் 15.02.2021 நாளிட்ட ஆணை.

- மேற்காணும் இருவரும் சமர்ப்பித்த பட்டா ஆவணத்தை ஆய்வு செய்யப்பட்டதில், திருமதி. ஜெ. ரூபிசேகர் சமர்ப்பித்த பட்டா எண். 871ல் (1) தைரியம் (2) எட்வர்டு என்ற பெயரிலும், இதே பட்டா எண். 871ல் திருமதி. விக்டோரியா ராஜாத்தி சமர்ப்பித்த பட்டாவில் அவரது பெயரான விக்டோரியா ராஜாத்தி என்ற பெயரிலும் உள்ளதால், பட்டா எண் .871ன் மெய்த்தன்மை குறித்து தரங்கம்பாடி வட்டாட்சியரிடம் கோரப்பட்டுள்ளது. வட்டாட்சியரின் அறிக்கை பெறப்படவில்லை.

- மேற்காணும் பட்டாவின் மெய்த்தன்மை குறித்து வட்டாட்சியரிடம் அறிக்கை பெற்றவுடன் அவ்வறிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, மனுதாரர் மகனின் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

சென்னை, குரோம்பேட்டை இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. ஜெ.ரூபிசேகர் என்பவர் தனது 18.01.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10,11/4, ஆஸ்பத்திரி தெரு, பொறையார், தரங்கம்பாடி என்ற முகவரியிலுள்ள சொத்தின் நத்தம் சர்வே எண்.643/7, (பட்டா எண்871) வரிவிதிப்பானது, சொத்தின் உரிமையாளர்களான தைரியம் மற்றும் எட்வர்ட் என்கிற பெயர்களிலிருந்து போலி ஆவணம் மூலம் திருமதி. விக்டோரியா இராஜாத்தி என்பவர் தனது பெயரில் முறைகேடாக பெயர் மாற்றம் செய்துள்ளார் என புகாராக தெரிவித்து மீண்டும் சொத்து உரிமையாளர்களான தைரியம், எட்வர்ட் என்கிற பெயரிலேயே சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் தரங்கம்பாடி பேருராட்சிக்குட்பட்ட நத்தம் சர்வே எண். 643/7 மற்றும் பட்டா எண்.871–ல் அமைந்துள்ள சொத்தானது, மனுதாரின் தந்தை வழி பாட்டி திருமதி. ராஜம்மாள் என்பவரின் சுயசம்பாத்தியத்தில் கிரையம் செய்யப்பட்டது. திருமதி. ராஜம்மாள் என்பவருக்கு 1. டேவிட் பாக்கியநாதன் (மனுதாரரின் தந்தை) 2. தைரியம் மற்றும் 3. எட்வர்ட் என 3 மகன்கள் இருந்தனர்.

திருமதி. ராஜம்மாள் என்பவரின் முதல் மகனான டேவிட் பாக்கியநாதன் என்பவருக்கு 3–பெண் குழந்தைகள் மற்றும் 1–ஆண் குழந்தை உள்ளது. 2–வது மகன் தைரியம் என்பவருக்கு திருமணமாகி வாரிசுகள் யாருமின்றி இறந்துவிட்டார். மூன்றாவது மகன் எட்வர்ட் என்பவருக்கு திருமணமாகவில்லை.

இந்நிலையில் ராஜம்மாள் என்பவரின் முதல் மகனும் மனுதாரரின் தந்தையுமான டேவிட் பாக்கியநாதன் மற்றும் மனுதாரரின் 2–வது சித்தப்பா எட்வர்ட் என்பவருக்கும் பாகபிரிவினை தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் தெடரப்பட்ட வழக்கில் (வழக்கு எண் SA No 529 of 2008) 15.02.2021 நாளிட்ட தீர்ப்புரையில் மனுதாரரின் பாட்டி ராஜம்மாள் என்பவரின் சொத்து முழுவதும் மனுதாரருடைய 2–வது சித்தப்பா எட்வர்ட் என்பவருக்கு முழு சொத்து சேரும் என தீர்ப்பு வழங்கப்பட்டதாக மனுதாரரின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டா எண் 871–ல் உள்ள சொத்து வரியானது (வரி விதிப்பு எண்.4586) தைரியம் மற்றும் எட்வர்ட் ஆகியோர் பெயர்களில் இருந்து வந்தது.

இதற்கிடையில் எட்வர்ட் என்பவர் எழுதியுள்ள 27.08.2001 நாளிட்ட உயில் சாசனத்தில், தனது சித்தியின் மகளான இராஜாத்தி என்கிற விக்டோரியா இராஜாத்தி என்பவரை சிறு வயதிலேயே தனது தாயார் இராஜம்மாள் என்பவரால் சுவிகாரம் எடுத்து கொண்டு, திருமணமும் செய்து வைத்துள்ளார் எனவும் மேலும் இராஜாத்தி தனது தாயாரையும், தங்கையாக இருந்து தன்னையும் (எட்வர்ட் என்பவரையும்) நன்கு பராமரித்து வந்த நிலையில், தனது தாயார் விருப்பப்படியும் மற்றும் தனது விருப்பப்படியும் தனது தாயார் ராஜம்மாள் பெயரிலுள்ள சொத்து தனது தங்கையான இராஜாத்தி என்கிற விக்டோரியா இராஜாத்தி என்பவருக்கும், அவரது

வாரிசுதாரர்களுக்கும் சேரும் என உயில் சாசனம் எழுதி தரங்கம்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார்.

திருமதி ராஜம்மாள் மற்றும் அவரது மகன்கள் மூவரும் காலமாகிவிட்டனர்.

மேற்காணும் தரங்கம்பாடி சார்பதிவாளரின் ஆவணத்தின் அடிப்படையில் திருமதி. விக்டோரியா ராஜாத்தி, பட்டா மாறுதல் கோரியதின் அடிப்படையில், தரங்கம்பாடி மண்டல துணை வட்டாட்சியரின் செயல் முறைகள் எண்.தொ.மு.ப.மா.II/395/2021/ஆ6, நாள்.24.08.2021 ஆணையில், "தரங்கம்பாடி வட்டம், எருக்கட்டாஞ்சேரி கிராமம், புல எண்.643/7 (பழைய புலஎண்.461/B/3A)–ல் நத்தம் வகைப்பாட்டில் 00230 ச.மீ. பரப்பளவு கொண்ட நத்தம் பட்டா எண்.871–ல் உயில் செய்த பட்டாதாரர்கள் பெயர்களை விலக்கி உயில் மூலம் பெற்ற திருமதி. விக்டோரியா ராஜாத்தி, க/பெ.சீமோன்ழான் என்பவர் பெயரினை மேற்படி அதே பட்டாவில் தாக்கல் செய்து ஆணையிடப்படுகிறது. என ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து சொத்து வரியானது திருமதி. விக்டோரியா ராஜாத்தி என்கிற பெயரில் தரங்கம்பாடி பேரூராட்சியில் சொத்து வரி (வரி விதிப்பு எண்.4586) வசூல் செய்யப்பட்டு வருகிறது என்பதை தரங்கம்பாடி பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது.

இவ்வாறு இருக்கையில், மனுதாரர் திருமதி. ரூபி சேகர் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் SA No 529 of 2008 வழக்கில் 15.02.2021 நாளிட்ட தீர்ப்புரைக்கு எதிராகவும் போலியான ஆவணம் மூலமாகவும் விக்டோரியா ராஜாத்தி என்பவர் முறைகேடாக தனது பெயரில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்து உள்ளதாக தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு 16.03.2025 நாளிட்ட மனுவில் புகார் தெரிவித்ததை தொடர்ந்து, திருமதி. ரூபிசேகர் மற்றும் திருமதி விக்டோரியா ராஜாத்தி ஆகியோர் 16.04.2025 அன்று தங்கள் அசல் ஆவணங்களை பேரூராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

மேற்காணும் இருவரும் சமர்ப்பித்த ஆவணங்களை பேரூராட்சி செயல் அலுவலர் பரிசீலித்ததில் திருமதி. ஜெ.ரூபிசேகர் சமர்ப்பித்த பட்டா எண்.871–ல் தைரியம், எட்வர்ட் ஆகியோர் பெயர்களிலும், திருமதி. விக்டோரியா ராஜாத்தி சமர்ப்பித்த பட்டாவில் பட்டா எண். 871ல் அவரது பெயரான விக்டோரியா ராஜாத்தி என்ற பெயரிலும் உள்ளதால், பட்டா எண்.871–ன் உண்மைத்தன்மை குறித்து தரங்கம்பாடி வட்டாட்சியரிடம் கோரப்பட்டுள்ளதை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த ஆவணங்களின் வாயிலாக தெரியவருகிறது.

மேற்காணும் நிலையில், பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி தரங்கம்பாடி வட்டம், எருக்கட்டாஞ்சேரி கிராமம், புல எண். 643/7 (பழைய புல எண். 461/B3A)ல் நத்தம் வகைப்பாட்டில் அமைந்துள்ள 00230 ச.மீ பரப்பளவு கொண்ட பட்டா எண். 871-ன் உண்மைத்தன்மை குறித்து தரங்கம்பாடி வட்டாட்சியரின் அறிக்கையினை பெற்று, விதிகளுக்குட்பட்டும் வழக்கு எண். S.A.529/2008ல் 15.02.2021 நாளிட்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஆணையினை கருத்திற்கொண்டும் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், பொதுமக்கள் தங்களது கோரிக்கைகளுக்கு நிவாரணம் தேடி பேரூராட்சி அலுவலகத்தை அணுகும் போது பொதுமக்கள் மற்றும் மனுதாரர்களிடம் அவர்களின் கோரிக்கைகளுக்கு நிவர்த்தி செய்வதற்கு உரிய ஆலோசனைகள் வழங்கியும், எவ்வித புகாருக்கும் இடம் அளிக்காத வகையில் கண்ணியத்துடன் நடந்து கொண்டு அவர்களின் கோரிக்கைகளுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 10-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி. ஜெ. ரூபி சேகர்,
எண்.12/94, 5 வது தெரு,
மும்மூர்த்தி நகர்,
குரோம்பேட்டை,
சென்னை – 600 044.

2) செயல் அலுவலர்,
தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி,
மயிலாடுதுறை மாவட்டம்

3) பேரூராட்சிகளின் ஆணையர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்
இகோ/உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/6/25
செயலாளர்
13/6/25

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032